சென்னை மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்துக்கான பணிகளின் போது எதிர்பாராத விதமாக காயமுற்ற திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சந்திரனை திருவள்ளூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து நலம் விசாரித்தார். இந்த சந்திப்பின் போது கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தொலைபேசி வாயிலாக சந்திரனிடம் நலம் விசாரித்தார். உடன் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை மக்கள் பயன்பெறுகிற வகையில் கொண்டாடும் விதமாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க. இளைஞரணி சார்பாக ஒவ்வொரு தொகுதியிலும் "கலைஞர் நூலகம் அமைத்து வரும் பணிக்கு வலுசேர்க்கும் விதமாக, கழக தீர்மானக்குழு சார்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 10 மாவட்டங்களில் "கலைஞர் நூலகம் அமைக்க ரூ.10 லட்சம் மற்றும் இளைஞரணி 2 ஆவது மாநாட்டு நிதியாக ரூ.1 லட்சத்துக்கான காசோலைகளை இளைஞரணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கழக தீர்மானக் குழுத் தலைவர் தமிழ்தாசன், தீர்மானக் குழுச் செயலாளர்கள் மீ.அ.வைதியலிங்கம், கீரை விஸ்வநாதன், அக்ரி கணேசன், உறுப்பினர் செஞ்சி சிவா ஆகியோர் வழங்கினர். அதுபோது அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி., மற்றும் வெற்றி செல்வன், முன்னாள் அமைச்சர் வ.சத்தியமூர்த்தி, சுப.த.திவாகரன், இரா.சேதுநாதன், பார் இளங்கோ உள்ளிட்ட தீர்மானக் குழு நிர்வாகிகள் உள்ளனர்.

கடலூரில் வெள்ளிக் கடற்கரையில்

'நடப்போம் நலம்பெறுவோம்' நடைப்பயிற்சி!

அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - சி.வெ.கணேசன் பங்கேற்பு!

கடலூர், நவ.6-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ், முன்னிலையில் கடலூர், தேவனாம்பட்டினம் வெள்ளி கடற்கரையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வாயிலாக 'நடப்போம் நலம்பெறுவோம்" நடைபயிற்சியை துவக்கிவைத்து பங்கேற்றனர்.

நேற்று முன்தினம் (4.11.2023) சுமார் 8 கிலோ மீட்டர் தூரமுள்ள கடலூர் வெள்ளிக் கடற்கரை முதல் மஞ்சை மைதானம் வழியாக மீண்டும் வெள்ளிக் கடற்கரையில் வந்தடையும் நடைபயிற்சி துவக்கி வைக்கப்பட்டு நடைபயில்வோர் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு நடைப்பயிற்சி மேற்கொண்டனர்.

தொடர்ந்து இந்நடைப்பயிற்சியானது மஞ்சை மைதானம் முதல் வெள்ளிக் கடற்கரை வழியாக மீண்டும் மஞ்சை மைதானத்தை வந்தடையும் வகையில் சுமார் 8 கிலோ மீட்டர் அளவில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ளது.

இந்நடைப்பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள நடைப்பாதை நெடுகிலும் பொதுமக்கள் நலம் கருதி உயர் இரத்த அழுத்தம் மற்றும் சக்கரை நோய் அளவினை தெரிந்துகொள்ளும் வகையில் இலவச பரிசோதனை மையங்கள், ஆம்புலன்ஸ் வசதிகள், இளைப்பாற இருக்கைகள், குடிநீர் வசதிகள், நடைப்பயிற்சிக் குறித்த விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் போன்ற நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் பல்வேறு முன்னேற்பாடுகள் செய்யப் பட்டிருந்தது.

உலக சுகாதார அமைப்பின் தரவுகளின் படி உடற்பயிற்சி செய்வது நீரிழிவு மற்றும் உயர்இரத்தஅழுத்த நோய்களின் தாக்கத்தை 28 சதவீதமும், இதயநோய் தாக்கத்தை 30 சதவீதமும் குறைக்கிறது என்பதை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க பொதுமக்கள் நலன் கருதி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நடைப்பயிற்சியானது மக்கள் சுறு சுறுப்பாகவும், ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சனைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது.

எனவே, பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி உடல் நலத்தினை பேணி காத்திட கேட்டுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கடலூர் மாநகர மேயர் திருமதி.சுந்தரிராஜா அவர்கள், மாநகர துணைமேயர் பா.தாமரை, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுகாதாரத் துறை, வருவாய்த்துறை, காவல் துறை, பொதுப்பணித்துறை, தோட்டக்கலைத்துறை, வனத்துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள், நடைப்பயில்வோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

சிவகங்கை மாவட்டத்தில்

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணி!

அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை.நவ.6-

சிவகங்கை மாவட்ட கழக அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் இலக்கிய அணிபுரவலர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் த. சேங்கை மாறன் வரவேற்றுப்பேசினார். மாவட்ட துணைச்செயலாளர் கே.எஸ்.எம். மணிமுத்து வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து விளக்கிப் பேசினார். செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன்பேசியதாவது.

வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை வாக்குச்சாவடி களின் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. எனவே இந்த முகாம்களில் ஒன்றிய, நகர, பேருர் செயலாளர்கள் மாவட்ட நிர்வாகிகள் பாக முகவர்களுடன் இணைந்து புதிதாக வாக்காளர்களை சேர்த்தல், நீக்குதல், தொடர்பான பணிகளை தீவிரமாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியில் கழகத்தினர் தீவிரமாக பணியற்றுமாறு உத்தரவிட்டுள்ளார். அவர் வேண்டுகோளை ஏற்று நமது மாவட்டத்தில் உள்ள நிர்வாகிகள் அனைவரும் வாக்காளர் பட்டியல் திருத்த பணியில் ஈடுபடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். 2024 பாராளுமன்ற தேர்தலில் கழக தலைவர் முதல் வர் தளபதி அவர்கள் வேண்டுகோளின் படி தமிழகத்தில் 40 தொகுதிகளும் வெற்றி பெற வேண்டும். இந்தியா கூட்டணி ஆட்சி தலைநகரில் அமைய வேண்டும். இதற்கு கழகத் தொண்டர்கள் ஒவ்வொருவரும் தீவிரமாக பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் நன்றி கூறினார். இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, செயற்குழு உறுப்பினர்கள் தா.ராமையா, எஸ்.முத்துதுரை பொதுக்குழு உறுப்பினர்கள் கரு.அசோகன், பி.டி.ஆர். முத்து பி.ஆர். பெருமாள், நகர்கழக செயலாளர்கள் துரைஆனந்த், க.பொன்னுச் சாமி, என். குணசேகரன், பெரி.பாலா, ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சண்முகவடிவேலு, விராமதிமாணிக்கம், கே.பாலசுப்பிரமணியன், பூமணி, எம்.ஜெயராமன், திருமலை முத்து ராமலிங்கம், வே.தமிழ்மாறன், கா.வெங்கட் ராமன், ஆறு. செல்வராஜன், துரை.ராஜாமணி,

எம்.அண்ணா துரை, நாகனி ரவி, பூபால சிங்கம், லெ.மு. ரவிச்சந்திரன், சுப.சின்னதுரை நா.நெடுஞ்செழியன், செல்வராஜ், யோககிருஸ்ண குமார், ஆர். எம்.கென்னடி, வே.ஆரோக்கியசாமி, பேருர்கழக செயலாளர்கள் கே.பி.எஸ். பழனியப்பன், அசோக், ஜெயராமன், நாகூர் கனி, கதிர் வேல், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், துணை அமைப்பாளர்கள் பரணி கிட்டு, மகாதீர், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானிகணேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, மகளீரணிநிர்வாகிகள் திலகவதி கண்ணன், மார்கரெட்கமலா, சண்முகப்ரியா, செல்வராணி, தெரஸா, விவசாய அணி அமைப்பாளர் எஸ்.எஸ். அருணாசலம், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், துணை தலைவர் கான் முகமது, நிர்வாகிகள் ராம். ரவி, கோடவுன்மணி, சிவபுரி சேகர், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், பொருளாளர் ஏ.எம். கண்ணன் திருநாவுக்கரசு ஷாஜகான், அண்ணாமலை, புதூர்கண்ணன், பேரூராட்சி மன்றத் தலைவர் நஜ்முதீன், தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன், புலிக்குட்டி, இளைஞரணி மனோகரன் நகர்மன்ற துணைத்தலை வர் எம்.கார் கண்ணன் தொ.மு.ச. சண்முகநாதன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.